

வாக்காளப் பெருமக்களே,

உடுமலைப்பேட்டை

சட்டமன்றத் தொகுதி

ஆதித்தமிழர் பேரவை வேட்பாளர்





# மா. வெங்கடாசலம் (எ) ஈழவேந்தன் அவர்களுக்கு

# டி.வி. சின்னத்தில்

வாக்களித்து வெற்றி பெறச்

செய்யுமாறு வேண்டுகிறோம்.



தேர்தல் நாள் :
13.04.2011

## ஆதித்தமிழர் பேரவை

உடுமலைப்பேட்டை சட்டமன்ற தொகுதி

அன்பார்ந்த ஆதித்தமிழர் அருந்ததியர் சொந்தங்களே...

தமிழகத்தில் நடைபெறவுள்ள சட்டமன்றத் தேர்தலில் ஓட்டுக்களைப் பெறுவதற்காக இலவசங்கள் என்ற பெயரில் **தி.மு.க. கூட்டணியும், அ.தி.மு.க. கூட்டணியும்** மாறி மாறி அறிக்கை விட்டுக் கொண்டிருக்கிறது. அவை மக்களின் நல்வாழ்விற்கான உருப்படியான திட்டங்களாக கண்டிப்பாக தெரியவில்லை.

தாழ்த்தப்பட்ட மக்களின் பாதுகாப்பு அரணாக இருக்கும் வன்கொடுமை தடுப்புச்சட்டத்தை நீக்க வேண்டும் எனவும், தாழ்த்தப்பட்ட மக்கள் என்றென்றும் அடிமைகளாகவே இருக்க வேண்டும் என்று கூறும் **கொங்குநாடு முன்னேற்றக்கழகத்திற்கா** உங்கள் ஓட்டு?

தமிழகத்தில் கள்ளுக்கடைகளை திறந்து தாழ்த்தப்பட்ட மக்களின் குடும்பங்களை நடுத்தெருவுக்கு கொண்டு வர நினைக்கும் **கொங்குநாடு முன்னேற்றக் கழகத்திற்கா** உங்கள் ஓட்டு ?...

நாடு சுதந்திரம் அடைந்து 60 ஆண்டுகளுக்குப் பிறகும் கல்வி வேலை வாய்ப்பில் அருந்ததியர்கள் பின் தங்கியுள்ளனர். அருந்ததியர்கள் கல்வி வேலைவாய்ப்பு போன்ற துறைகளில் முன்னுரிமை பெறவும், ஆதித்ததமிழர் பேரவையின் கடும் முயற்சியினால் அருந்ததியர்களுக்கு 3% இட ஒதுக்கீடு கிடைத்தது. இட ஒதுக்கீட்டுக்கு முட்டுக்கட்டை போட்டவர் ஜெயலலிதா, சக்கிலியர்களின் **துரோகி ஜெயலலிதாவுக்கா** உங்கள் ஓட்டு ?...

அருந்ததியர்களுக்கு இட ஒதுக்கீடு கிடைத்து விட்டால் கல்வி, வேலை வாய்ப்பில் முன்னுரிமை பெற்று விடுவார்கள். ஆகவே எப்படியாவது அருந்ததியர்களுக்கான இட ஒதுக்கீட்டை தடுத்து நிறுத்துவேன் என்று உயர் நீதிமன்றத்தில் வழக்கு போட்ட **புதிய தமிழகம் கிருஷ்ணசாமி** அங்கம் வகிக்கும் அ.தி.மு.க. கூட்டணிக்கா உங்கள் ஓட்டு? ...

தமிழகத்தில் உள்ள சட்டமன்றத் தொகுதிகளில் அருந்ததியர்களுக்கு வாய்ப்பு கொடுக்காத துரோகி **தி.மு.க. கூட்டணிக்கும், அ.தி.மு.க. கூட்டணிக்கும்** நடைபெறவுள்ள இந்த தேர்தலில் தக்க பாடம் புகட்டுவோம்.

உடுமலைப்பேட்டை சட்டமன்ற தொகுதியில் ஆதித் தமிழர் பேரவை சார்பில் போட்டியிடும் நமது வேட்பாளர். **மா. வெங்கடாசலம் என்கிற ஈழுவேந்தன்** அவர்களுக்கு டிவி. சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெறச் செய்தால்....

வெள்ளையர்கள் ஆட்சிக் காலத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட பஞ்சமி நிலங்கள் தற்போது கவுண்டர், நாயுடு இன ஆக்கிரமிப்பில் உள்ள **12½ லட்சம் ஏக்கர் பஞ்சமி நிலங்களை** மீட்டு உரியவர்களிடம் ஒப்படைக்க பாடுபடுவோம்.

தமிழகத்தில் **பூரண மது விலக்கு** கொண்டு வர பாடுபடுவோம்.

அருந்ததியர்களுக்கு 6% இட ஒதுக்கீடு கிடைக்க பாடுபடுவோம்.

ஆகவே, ஆதித் தமிழர் உறவுகளே, நம்முடைய குரல் சட்டமன்றத்தில் எதிரொலிக்க அருந்ததியர் வேட்பாளர் **மா. வெங்கடாசலம் (எ) ஈழவேந்தன்** அவர்களுக்கு உங்களது வாக்குகளை **டி.வி. சின்னத்தில்** வாக்களித்து வெற்றி பெறச் செய்ய வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

# நமது சின்னம் டி.வி. சின்னம்



டால்வின் ஆப்செட் பிரிண்டர்ஸ், பள்ளிவாசல் வீதி, உடுமலை. செல் : 98422 99810. பிரதிகள் : 2000